**ஏறாவூர் நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏறாவூர் நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஏறாவூர் நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஏறாவூர் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஏறாவூர் நகர சபையின செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றிலும் பதிவேட்டிலும் காட்டப்பட்டுள்ள வருமான மீதிகளிற்கிடையே ரூபா 4,684,089 தொகையான வேறுபாடு காணப்படுகின்றது | இறுதிக் கணக்கறிக்கைகளில் கூடுதலாக வெளிப்படுத்தப்பட்டிருந்த தொகையானது சபையின் அனுமதியைப் பெற்று எதிர்வரும் நிதியாண்டில் சீர்செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் சரியான மீதிகளை இனங்கண்டு கொள்ள வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371 | வழங்கப்பட்ட ரூபா 416,768 முற்பணத் தொகைகளை அறவிடுவதற்கு பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல வருடங்களாக சீர் செய்யப்படாமல் காணப்படுகின்ற முற்பணங்களை பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | முற்பணங்களை அறவிடுவதற்கு காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571(2) | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 14,129,347 வைப்புக்களை மீளச்செலுத்துவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வைப்புத்தொகைகளை மீளளிப்பு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வைப்புக்களை உரிய நபர்களுக்கு திருப்பிச் செலுத்தவோ அல்லது வருமானமாக மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 12,946,800 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 13,609,375 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள ரூபா 19,229,423 நிலுவை வீதவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட கொவிட் - 19 மற்றும் பொதுமக்களின் தொழில் பாதிப்பு போன்ற காரணத்தினால் வரியினை பெற்றுக்கொள்ளமுடியாத அசாதாரண சூழ்நிலை காணப்படுகின்றது. | வீதவரியினை அறவிடுவதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | விறாந்துக் கட்டண நிலுவை ரூபா 1,014,294 இலிருந்து மீளாய்வாண்டு காலப்பகுதியில் எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்தும் நிலுவையாக காணப்படுகின்றது. | நாட்டில் ஏற்பட்ட கொவிட் - 19 மற்றும் பொதுமக்கள் தொழிலின்றி காணப்படுவதனாலும் மனிதாபிமான அடிப்படையில் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. | விறாந்துக் கட்டண நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கேள்வி வாடகை, இறைச்சி கடை குத்தகை மற்றும் பழைய சந்தைக் குத்தகை ரூபா 1,524,685 தொகை 10 வருட காலமாக அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவை செலுத்துவோரில் பெரும்பாலானோரை அடையாளப்படுத்த முடியாமலுள்ளது. மேலும், நீதிமன்றம் மூலமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஆவணங்களையும் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. | நீணடகால நிலுவைகளை அறவிட அல்லது உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற பொதுக்கணக்கு குழுவினால் கோரப்பட்ட குறிப்பிட்ட கட்டிடம் தொடர்பான விரிவான அறிக்கை (Comprensive Report) சுமார் 05 ஆண்டுகளுக்கு மேலாக சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மட்டக்களப்பு கட்டடங்கள் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | பாராளுமன்ற பரிந்துரைகளுக்கு அமைய சபை செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக மின்சார சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 786,122 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவைத் தொகை தொடர்பாக எவ்விதமான ஆவணமும் தற்போது எமது சபையில் காணப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால நிலுவைகளை அறவிட அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| புன்னைக்குடா வீதியில் அமைந்துள்ள இரண்டு வணக்க ஸ்தலங்களுக்கு சொந்தமான காணியினை 33 வருடங்களுக்கு ரூபா 22.28 மில்லியன் நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்று ரூபா 193 மில்லியன் மதிப்பீட்டில் சந்தைக் கட்டிட தொகுதியினை அமைக்க 2016 ஒக்டோபர் இல் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள போதிலும், இவ்வொப்பந்தம் மீளாய்வாண்டு இறுதிவரை முடிவடையாத காரணத்தினால் 2016 ஒக்டோபர் மாதத்திலிருந்து வருமானம் எதுவும் பெறப்படாத நிலையில் அவ்வணக்க ஸ்தலங்களுக்கு நில வாடகையாக மாதாந்தம் ரூபா 56,000 சபையினால் செலுத்தப்பட்டு வருகின்றது. | LDSP வேலைத்திட்ட மீன்சந்தை நிர்மாணப்பணிகள் முடிவுற்ற பின்னர் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டு சபையினால் வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வேலைத்திட்டங்களை உரிய காலப்பகுதியில் நிறைவேற்றி உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி மானிய (PSDG) வேலைத்திட்டம் 2021 இன் கீழ் சிறுவர் பூங்காவினை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 600,000 பெறுமதியில், ஆற்றுமண் அரிப்பின் விளைவுகளை குறைக்கும் நோக்கில் ரூபா 243,000 செலவில் கம்பிக்கூடு மற்றும் கருங்கல் என்பன 2021 செப்டெம்பர் 13 ஆம் திகதிக்கு முன்னர் பெறுகை செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கருங்கற்கள் நிரப்பப்பட்ட மதில் (Gabion) நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த குறைபாடு எம்மால் அடையாளப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தற்போதைய விலை ஏற்றம் காரணமாக சபையின் நிதி நிலைமை குறைவாக காணப்படுவதால் 2023 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த வேலை செய்யப்படுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. | வேலைத்திட்டங்களை உரிய காலப்பகுதியில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 17 வகையான அபிவருத்தி இலக்குகளை உள்ளடக்கியதாக எமது சபைக்குரிய குறிகாட்டிகள் 2022 பாதீட்டில் உள்வாங்கி தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த சில நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக எமது சபையில் செய்யப்பட்ட செலவின விபரங்கள் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |